[1970 மார்ச் 20

Share capital to Primary Land Development Banks

*463 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Government is contributing towards share capital to the Primary Land Mortgage Banks in the State; and

(b) if so, how much?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) ஆம்.

(இ) புதிதாகத் திறக்கப் பெற்ற 60 வட்டார நிலவள வங்கிகளுக்கு, பங்கு மூலதன உதவியாக தமிழக அரசு ரூ. 15 லட்சம் வழங்கியுள்ளது.

திரு. கே. விநயகம்: தலைவர் அவர்களே, இப்படி அரசாங்கத்தினால் 15 லட்சம் ரூபாய் மூலதனமாகத் தரப்பட்டிருக்கிறதே, இது அரசாங்கத்தினுடைய பங்காக இருந்தால் அவர்களுடைய மொத்த கேபிடல் எவ்வளவு இருக்க வேண்டும்? அதை வைத்துக்கொண்டு எவ்வளவு அளவிற்குக் கடன் கொடுக்க முன்வந்திருக்கிறது? அதற்கு அரசாங்கம் உதவி செய்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, அந்தந்த வட்டாரத்தில் பொதுமக்கள் எவ்வளவு பங்குத் தொகை முதலீடு செய்கிறார்களோ, அதற்கு மேற்படாமல் அந்த வங்கிக்கு, அரசு 25 ஆயிரம் ரூபாய் வரை மூலதனம் வழங்குகிறது. பொதுமக்கள் 25 ஆயிரமும், அரசு 25 ஆயிரமும் சேர்ந்து 50 ஆயிரம் மூலதனமாக உள்ள அந்த வங்கிக்கு, 10 லட்சம் ரூபாய் வரையில் கடன் வழங்க சக்தி இருக்கிறது.

திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்: தலைவர் அவர்களே, தொடக்க நிலவள வங்கி ஆரம்பித்ததிலே சர்க்கார் மேற்கொண்ட நடைமுறைத் திட்டம் என்ன? வட்டாரத்திற்கு ஒரு வங்கி என்று ஏற்படுத்துவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும்? ஏற்கெனவே இயங்கி வருகிற, தாலுக்காவுக்கு ஒரு நில அடைமான வங்கி என்று இருந்துவருகிற வங்கியின் வருங்கால நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, 24---3---1969 அன்று, அதாவது ஒரு வருடத்திற்கு முன்னால், இப்பேரவையின் முன்னால் வெள்ளை அறிக்கை ஒன்று வைக்கப்பட்டு, ஒரு வட்டாரத்திற்கு ஒரு நிலவள வங்கி என்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. பழைய வங்கிகளின் நிலைமைபற்றிக் கேட்டார்கள். பழைய வங்கிகளுக்கும் மூலதனமாகப் பணம் கொடுக்கிறோம். புதிய வங்கிகளுக்கு 15 லட்சம் ரூபாய் என்றால் பழைய வங்கிகளுக்கு 21 லட்சம் ரூபாய் கொடுக்க இந்த அரசு முன்வந்திருக்கிறது. இந்த மூலதனப் பணம் எல்லாம் ரிசர்வ் பாங்கியிலிருந்து பெறப்படுகிறது. ரிசர்வ் பாங்க் மிகவும் குறைந்த வட்டிக்கு அரசுக்குப் பணம் கொடுக்கிறது. முதல் இரண்டு வருஷத்திற்கு வட்டி கிடையாது. அடுத்து மூன்று வருஷத்திற்கு இரண்டு சதவிகிதமும், அதற்குப் பிறகு நான்கு வருஷத்திற்கு 2½ சதவிகிதமும், அதற்குப் பிறகு மூன்று வருஷங்களுக்கு மூன்று சதவிகிதமும் என்ற அளவில் ரிசர்வ் பாங்க் கொடுக்கின்ற பணத்தை முதலீடு செய்வதன்மூலம் அரசுக்கு வருவாய் இருக்கிறதே தவிர, செலவு இருக்காது.